உளி - 8 | ஓசை - 6 | டிசம்பர் - 2024 | திங்களிதழ்

படைப்பு

www.padaippu.com

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



அரசு பதிவு எண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர்:
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு:
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு:
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி:
ஷென்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு:
ஆர்.பிரகாஷ்

இணையதள முகவரி:
padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
# 8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

admin@padaippu.com
+91 73388 97788, 73388 47788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| அழ.இரஜினிகாந்தன் | 04 |
| மெஹராஜ் பேகம் | 04 |
| பா.முத்துரத்தினம்... | 04 |
| ஜே.ஜே.அனிட்டா | 05 |
| எம்கே | 05 |
| மோ.லோகநாதன் | 06 |
| மகேஷ் சிபி | 06 |
| மா. காளிதாஸ் | 07 |
| செ.ரா.கிருஷ்ணகுமாரி | 07 |
| ஜெயதேவன் | 08 |
| ஹிம்சா | 09 |
| சாய் மீரா | 09 |
| வ.ரா. தமிழ் நேசன் (மும்பை) | 10 |
| ச.ஆனந்தகுமார் | 11 |
| கௌ.அஸ்வின் பிரபு | 11 |
| கோ.லீலா | 12 |
| ச. இராஜ்குமார் | 13 |
| ஆ.சார்லஸ் | 14 |
| மணி அமரன் | 14 |
| வி.வி.கலைச்செல்வி | 15 |
| முகமது பாட்சா | 15 |
| தங்கேஸ் | 16 |
| பூங்கோதை கனகராஜன் | 16 |
| நந்தினி மோகனமுருகன் | 17 |
| கவிதைச் சிறுவன் | 17 |
| சேனைத்தமிழன் | 18 |
| கௌ ஆனந்தபிரபு | 18 |
| கோ. பாரதிமோகன் | 19 |
| தா. பிரபுபாரதி | 19 |
| யாழ் ஆதி | 19 |
| ரமீஸ்கான் அப்பாஸ்... | 20 |
| தி.கலையரசி | 20 |
| கே.பாலன் வடக்கத்தியான் பட்டி | 21 |
| ஜெகன் மோகன் | 21 |
| நேசமிகு ராஜகுமாரன் | 22 |
| Dr ஜலீலா முஸம்மில் | 22 |
| ஸ்ரீவாரி | 23 |
| பென்ஸ் பிரான்சிஸ் | 23 |
| அன்புடன் ஆர்க்கே! | 24 |
| த.முருகன் | 24 |
| ஜீ.சுமித்ரா | 25 |
| கி.கவியரசன் | 26 |
| ஐ.தர்மசிங் | 26 |
| ஜனனி | 26 |
| அருப்புக்கோட்டை ஆதன் ஆரா | 27 |
| வருணன் | 27 |
| தீபிகா சுரேஷ் | 28 |
| நிழலி | 28 |
| பிரபுசங்கர் க | 29 |
| ஷப்ரா இல்முத்தீன் | 30 |
| கோவை புதியவன் | 30 |
| வினோத் பரமானந்தன் | 30 |
| பரமேஸ்வரி சண்முகம் | 31 |
| எஸ்.உதயபாலா | 31 |
| அ.சீனிவாசன் | 32 |
| அ. உமர் பாருக் | 32 |
| நயினார் | 33 |
| மு.முபாரக் | 33 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | 34 |
| சுரேஷ்பாபு ராசேந்திரன் | 34 |
| கோ. சிவா தமிழ் | 35 |
| த. ரவீந்திரன் | 35 |
| சங்கரி சிவகணேசன் | 36 |
| காசாவயல் கண்ணன் | 36 |
| ரிஸ்கா முக்தார் | 37 |
| உமா மஹேஸ்வரி பால்ராஜ் | 38 |
| கா வெங்கடேஸ்வரன் | 38 |
| மகா செல்வம் | 39 |




வருடந்தோறும் சந்தித்து
மகிழ்வோடு உரையாடி
நலம் விசாரித்து விசாரிக்கப்பட்டு
அச்சேறிய தனது நூல்களை
வெளியிடும் பிரபலங்களோடு
சுயமிக்கள் எடுத்து சிற்றுண்டி சுவைத்து
பரிசுகள் பெற்று
அலைபேசி எண்களை வாங்கி
பரிமாறி புதிய படைப்பாளிகளின்
நட்புகளை பெற்று
பிரியா விடை பெற்று
என...
சந்தோஷமாகத்தான் கழிகிறது
ஒவ்வொரு ஆண்டும்...
அடுத்த ஆண்டும்
கலந்து கொள்ள
ஆவலாகத்தான் இருக்கிறது
கையிருப்பில் ஏதும்
கவிதைகள் இல்லை என்பதை
நினைத்தால்தான்
கவலையாக இருக்கிறது...!

■ அழ.இரஜினிகாந்தன்

கைகளை அசைத்தபடி
நீண்ட நேரம் கால் கடுக்க
நின்று கொண்டே
சாப்பிட அழைக்கும்
அந்த நெடுஞ்சாலை
உணவகத்து ஊழியரை
நான் என் கவிதையில்
இடம் கொடுத்து அமர வைத்து
அழகு பார்த்தேன்

■ மெஹராஜ் பேகம்

வேராய் இருந்தவர்கள்
வேறாகிப் போனார்கள்
முதியோர் இல்லத்துக்கு...

■ பா.முத்துரத்தினம்...



நோயில் பூசியவனின்
வாழ்தலுக்கான மன்றாட்டு

உபத்திரம் தராமல் இறந்தவனின்
வீட்டிலிருந்து வெளியேறும் பழைய கண்ணீர்

அநாதையாய் பிறழ்ந்து திரிந்தவளின்
கருவை சூழ்ந்திருக்கும்
புதிய பிறழ்வு

ஒரே கடவுளிடம்
இருப்பவனும் இல்லாதவனும் தரும்
ஒரேமாதிரி காணிக்கை

துறவனின் மனபத்தியத்தில்
நிலைத்த பசியோடலையும் மர்ம விரகம்

உயில் எழுதிய பின்
மரணப் படுக்கையிலிருப்பவனுக்கு
வழங்கப்பட்ட கருணையின் முத்தம்

கருப்பு கம்பிகளுக்குள்ளிருந்து
பேசுபவளின் சிவப்பு தர்க்கம்

பழுத்ததும் கிளை வெறுத்த இலையை
மறுக்காமல் முதுகிலேற்றி
ஆறுதலின் திசைபக்கம்
நழுவ விடும் நதி

நரை தொற்றிய பின்
காதலென்ன என வியக்காதே.

உடல் வற்றிய பின்னும்
உயிர் பற்றியிருக்க
காதலைத் தவிர
வேறென்ன தேவை...?!

■ ஜே.ஜே.அனிட்டா

சொற்களற்ற தனிமைகள்
இணையவுலகில் மூழ்கிக் கிடக்கும்
நவீன இளைஞர்கள்...!

பசித்த கண்கள்
உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கின்றன
ஆபாசக் காட்சிகள்...!

வற்றிய ஆறு
காய்ந்து போய் கிடக்கின்றது
உழவனின் ஒட்டியவயிறு...!

காய்ந்த நிலம்
புறநகரில் கம்பீரமாய் நிற்கிறது
கான்கிரீட் காடு...!

■ எம்கே



எங்கு தலை சாய்த்து கொண்டாலும்
உன் தலை தாங்கிய
கோபுரத்தின் நிரல்!
காலி செய்யப்பட்ட
என் கோப்பையை
சொற்களைக் கொண்டு
நிரப்பிக்கொண்டே இருக்கிறேன்.
உன் இல்லாமையை அவைகளால்
சரிகட்ட முடியவில்லை
அவைகள் வலிமையற்று இருக்கிறது,
உலகின் பிரம்மாண்டம் எதுவாயினும்
அது தஞ்சை பெரிய கோவிலோ
சீனப் பெருஞ்சுவரோ
அடிமைகளின் ரத்தம் படிந்து
இருப்பதை போல
என்னை பற்றிய கேலிகளுக்குப் பின்
உன் மேல் கொண்ட அன்பின் வாசம்
வீசிக்கொண்டே இருக்கிறது.
தொழிலாளிகளின் சங்கங்கள் இல்லாத தொழிலை,
அங்கீகரிக்கப்படாமல் ஊதியம் அற்ற
உழைப்பை நூற்றாண்டுகாலமாய் செய்யும்
பெண்களைப் போல
என் அன்பும் இருக்கிறது,
ஏழையின் காதலுக்கு அன்பே வெகுமதி,
எதுவாயினும் அதில் சிறந்த ஒன்றே
உனக்கு கிடைக்க வேண்டும்,
என்னில் சிறந்த ஒன்று
இந்த அன்பு மட்டுமே
எனவே அதையே உனக்கு தருகிறேன்.

■ மோ.லோகநாதன்

புதியதாய் அந்த மீன்
வந்து சேரும் வரை
தொட்டியை
கடல் என்று
நம்பிக் கொண்டிருந்தது
பழைய மீன்
இப்போதெல்லாம்
தொட்டி முழுக்க நீந்துகிறது
கடல் கதை

■ மகேஷ் சிபி



அந்தரத்திலிருந்து தொங்குகிறது
ஒரு ஊஞ்சல்.

இறந்தகாலமும் எதிர்காலமும்
சங்கிலியாகத் தொங்க
நிகழ்காலப் பலகையில்
மெல்லிய படலமாகப் படிகிறது
என்னுடல்.

உந்தித் தள்ளிய
உன் ஒரு சொல்லில்
மேலும் கீழுமாக ஏறி இறங்குகிறது
என் மௌனம்.

கால்களில் படிந்த ஊதாச் சொட்டுகளில்
இன்னும் வெண்மையாகிவிட்டேன்.

கீழிறங்கித் தத்திய என்னை
ஒரு புறாவைப் போலக்
கைகளில் ஏந்தி
அலகு முத்தம் தந்தாய்.

அளவான ஒலியுடன்
வைக்கப்பட்ட சுப்ரபாதம் போல்
அந்த இடத்தை நிறைத்தது
நம் குனுகல்.

நீ கவனித்தாயா?
லேசான புன்னகையுடனும்
கைநிறைய தானியத்துடனும்
நம் பசியைத்
தூவத் தயாராக இருக்கிறார்
நம் கடவுள்.

■ மா. காளிதாஸ்

மேய்ப்பனை தொலைத்தவள்
ஒரு நிராகரிக்கப்பட்ட அன்பின்
பின் செல்கிறாள்

தூய அன்பின் நிழலை பாராமல்
தூரத்துப் பச்சைக்காக
ஏங்குகிறாள்

கொட்டிக்கிடக்கும் பிரியத்தை விடுத்து
ஒரு சொட்டு கருணைக்காக
காத்துக் கிடக்கிறாள்

நேசத்தைக் கண்டு
புறமுதுகிட்டோடும் அவன்
முதுகில் வழிவது இவளின் குருதி

கூர்மழுங்கிய கத்தியால்
நேசத்தை சிதைத்தவனிடத்தில்
சாகாமலும் பிழைக்காமலும்
கிடக்கிறது காதல்.

■ செ.ரா.கிருஷ்ணகுமாரி



நீயும்தான் தலைகோதி விடுகிறாய்
நீயும்தான் என் உடையை திருத்துகிறாய்...
நீயும்தான் தேநீர் கலக்கித் தரவும்
உறங்கும் வரை உடனிருந்து
பின் உறங்கவும் செல்கிறாய்

என் கண்ணீரை துடைக்கும்
முதல் விரல் உன் விரல்தானே

என் பூஜைக்கு முதல் மலர்
உன் தோட்ட மலராகத்தான் வருகிறது
புலர் காலையில்...

உணவை சரி பங்கிட்டு
தட்டில் வைத்தாலும்
ஒவ்வொரு கவளம் எடுக்கும் போதும்
என் தட்டில் இன்னொரு கவளம் போடுகிறாய்
ஒவ்வொரு முறையும்...

ஒரே படுக்கையை பகிர்ந்தாலும்
பெரும் பகுதி எனக்கு விட்டு
உனக்குச் சுருக்குகிறாய்...

எனக்குப் பிடித்தது நீலம் என்பதால்
உனக்குப் பிடித்த இள மஞ்சள்
நிறத்தையே மாற்றுகிறாய் உன் அறையில்...

இருவர் கனவில் வரும் காதலிகள் மாறியிருந்தாலும்
ஒரே கனவைத்தான் காண்கிறோம்
நான்கு கண்களில்...

ஊனை உருக்கி எனக்காக நீ பாடிய
ஏ.எம் ராஜா பாடலைப் போல்
உனக்காக நான் எப்போதடா எழுதப்
போகிறேன் கண்ணதாசன் போல்
ஒரு ஜீவ கவிதை
என் ஆருயிர் நண்பனே...
(ஒரு நாள் என்பது 24 மணி நேரம் அல்ல)

■ ஜெயதேவன்



## ஒரு பிடி இருட்டு

இதயம் வலுவான சதைக்குறிப்பு
அதில் சாய்க்க முடியாத
நினைவுகளை
நீதான் வரிகளாக்கினாய்

கவனக்குறைவான தேசத்தில்
கண்களை விட்டுவிட்டேன்
நினைவாற்றல் இல்லாத
போது பார்வைகளை மீட்டுகிறேன்

புறநினைவுகளை
ஆற்றுப்படுத்தும்
அகச் சுவர்களின்
ஈரப்பக்கங்கள்
இடுப்பறுத்து கிடக்கையில்
துயிலுடைந்து துன்புறும்
ஒரு பிடி இருட்டு
என்னை ஏதோ செய்கிறது.

■ ஹிம்சா

## நின்நெஞ்சு நேர்பவள்

காடும்
அதனிடை மரங்களும்
மண்டிய புற்களும்
ஈரம் பரவிய மண்
படர்ந்த பாசிப்பச்சையும்
எனைச் சூழ்ந்து கொண்ட
குளிர் காற்றையும்
ஓங்கியிழுத்த ஒரு மூச்சில்
உள்ளிட்டு நிரப்பிக்கொண்ட
நிமிடங்கள்
ஒரு முறை
என் உச்சிக்குழிக்கு ஏறி
உள் நாசியை நிறைத்துத்
திரும்பியதடா
இனியா
நின் நடுநெஞ்சுள்
யான் நிறைந்த அக்கணத்துள்

■ சாய் மீரா



இப்படியாக
என்னை நானே
கண்ணாடியில்
பார்த்துக் கொள்கிறேன்.

அதே கண்கள்,
அதே காது, மூக்கு
அதே கன்னம்
மொத்தத்தில்
அதே முகம்
அதே உடல்.

எனக்குள்ளும்
யாதொரு மாற்றமுமில்லை;
பார்க்கின்ற
உங்கள் கண்களைத் தவிர!

விளக்கொளியில்
இன்னும்
அழகாகிறேன்;
களைந்த தலை மயிரை
வாரி முடிச்சிட்டு கொண்டேன்.

என்னைப் போலவே
தெரியும்
இப்பிம்பத்தை
களைத்து, களைத்துப்
பார்க்கிறேன்;
மீண்டும், மீண்டும்
நிலைக் கண்ணாடியில்
என் உருவமே
படிகிறது.

நீங்களும்
ஒரே ஒரு முறை
உங்களை
கண்ணாடியில்
பார்த்துக் கொள்ளுங்களேன்!

■ வ.ரா. தமிழ் நேசன் (மும்பை)

காலத்தின் நகர்வுகள்
வயிற்றின் பள்ளத்தாக்கிற்குள்
திசையற்று இறகாக பயணிக்கிறது...

எதிர்பார்ப்பு... சுழிக்காற்றில்
யதார்த்தம் சிதைந்து
ஏமாற்றமாய் உருமாறி
ஒடுங்கி ஒளிகிறது...

வளர்ந்த நாடாகும் ஆசையில்
உலகமயமானது சந்தை...
நிச்சயமற்ற தன்மையை
மூச்சாக்கி சுவாசிக்கிறோம்...

பெருநிறுவன ஆட்குறைப்பு...

அறிவிப்பின் நேர்வினை
வேண்டுதல்களாய் உருமாறி
பிரகாரம் சுற்றுகின்றன...

பேசுவதேயில்லையென வருத்தப்படும்
ஓய்வு பெற்ற அப்பா...

தேவைகளுக்குள் மூச்சுத்திணறி
பெருநிறுவன ஆக்டோபசிடம்
ஒப்புக்கொடுத்த விலங்கியல்...

வளர்ந்த நாடுகளில் இணைந்து விடுவோமென...
சலிக்காமல் செய்தி ஊடகங்களில் பேசுகிறார்கள்
தலைவரென சொல்லிக் கொள்பவர்கள்

■ ச.ஆனந்தகுமார்



உடைத்தவரை
விட்டுவிட்டு
ஊரையே அழிக்கின்றது
அணை உடைத்த
சினமெனும் நதி...!

■ கௌ.அஸ்வின் பிரபு

## அன்பெனும் ஐம்பெரும்பூதம்

அடர்மரக் காட்டினுள்
விழும் சூரிய ஒளியென
என் மனக்காட்டில் நீ விழுந்தால்
என் செய்வேன் என் செய்வேன்...

ஒளி பருகி ஒளி பருகி
பச்சையம் கூட்டும் இலையென
உனை ரசித்து உனை ரசித்து
இச்சை கூட்டி அன்பு செய்வேன்...

காற்றும் நுழையா கடும்பாறை
தன்னில் நுழையும் நீரென
என் மனப்பாறையில்
நீ நுழைந்தால் நான்
என் செய்வேன் என் செய்வேன்

வேர்விட உடையும்
பாறையின் ஈரமென
செடியில் பூக்கும் மலரென
உனை மலர்த்தி உனை மலர்த்தி
அன்பு செய்வேன்
அந்திசாயும் வேளையில்
அலையாடும் நீரோடு
செம்மண்ணென கலக்கும்
செவ்வானமென...
என் மன அலையில் நீ கலந்தால்
என் செய்வேன் என் செய்வேன்

செவ்வான நிறமேந்தி நிறமேந்தி
தன்னிறம் இழந்த தண்ணீரென
உனை ஏற்று உனை ஏற்று
இரண்டற ஒன்றாகி
அன்பு செய்வேன்...

காற்றோடு அலைகின்ற இசையென...
உன் நினைவை என்னோடு
அலையவிட்டால்
என் செய்வேன் என் செய்வேன்

இசையை மீட்டும் காற்றெனவே
உன் நினைவை மீட்டி
உன் நினைவை மீட்டி
இசையாகி காற்றெனவே
காதல் செய்வேன்...
அந்தியில் மலைக்குப்பின்





மறையும் செங்கதிர் போலோ
கடலில் கரையும் தீச்சுடர் போலோ
என்னிடம் உன்னை மறைத்தால்
என் செய்வேன் என் செய்வேன்

மீண்டும் எழுச்செய்யும்
கடலெனவோ மலையெனவோ
எழச் செய்து எழச் செய்து
அன்பு செய்வேன்...

ஆர்ப்பரித்து கரைத்தொடும்
அலையை புறக்கணித்து
பின் தள்ளும் கரையென
எனை புறந்தள்ளினால்
என் செய்வேன் என் செய்வேன்

கரையை நொடிக்கொரு முறை
எட்டிப் பார்த்து எட்டிப்பார்த்து
கரை தாண்டாது ஆர்ப்பரிக்கும்
அலையென...
ஆர்ப்பரித்து ஆர்ப்பரித்து
என் மன எல்லைக்குள்
ஆனந்த நடனமிட்டு
எனக்கு நானே அன்பு செய்வேன்.

■ கோ.லீலா

## மௌனமே நீ கலையாதிரு

## மௌனமே நீ கலையாதிரு

மனதில் சொற்களின் நீட்சி
தொடர்ந்துகொண்டேயிருக்கிறது

வெகு தூரம் ஓடிக் கலைத்த இருதயம் போல
எனக்குள்ளே சொற்கள்
சுழன்றுக்கொண்டிருக்கிறது

பறந்து திரிந்து அலைந்து
மரக்கிளையில் வந்தமர்ந்த
ஒரு பறவையின் இரகைப் போல
சொற்கள் எனக்குள் வந்து விழுகிறது.

இது சொற்களின் தேடல்கள்
மௌனமே நீ கலையாதிரு...!

■ ச. இராஜ்குமார்



## தாகம்

அறிமுகமில்லாத
புதிய இடம்.
மனித குடியிருப்புகள்
அதிகமற்ற வெட்டவெளியில்,
இருசக்கர வாகனத்தில்
பயணம்.

எடுத்துவந்த தண்ணீரும்
தீர்ந்து விட,
தொடரும்
தண்ணீர் தாகம் தணிக்க,
வழியேயில்லை.

பயண அனுபவம்
தண்ணீரின்றி,
உவர்ப்பாகவே முடிந்தது.

வீடுவந்து சேர்ந்ததும்
முதல் வேலையாக,
மொட்டை மாடியில்
பறவைகளுக்கு,
தண்ணீர் வைத்தேன்.

எங்கிருந்தோ வந்து
தாகம் தணிக்கிறது,
புறா ஒன்று.

■ ஆ.சார்லஸ்.

சிறுபிள்ளையென இருந்தவரை
இடுப்பில் தூக்கி வைத்து
செல்லம் கொஞ்சியது உனதன்பு

பார்த்துக்கொண்டிருக்கும் போதே
நெடுநெடுவென
மூங்கில் புல்லைப் போல
ஏன் இத்தனை வளர்ந்தாய்?

பார் இப்போது
அதே அன்பின் முகம்
குஞ்சுகளை விலக்கும் தாய்க்கோழியின்
கூரலகையல்லவா கொண்டு திரிகிறது

காதலே
நீ
அருகம்புல்லெனவே இருந்திருக்கலாம்.

■ மணி அமரன்



## பிடிக்கிற வண்ணம்
## பிசகாத எண்ணம்

நாலைந்து நிறங்களில் குட்டி போட்டிருந்தது
பக்கத்து வீட்டுப் பூனை
எல்லாம் கண்விழித்து
எப்போதும் எல்லாப் பக்கமும்
மியாவ் மியாவ் தான்

வெள்ளை வேண்டுமென்றொருவர்
கறுப்பு பிடிக்குமென்றொருவர்
ஆரஞ்சு அருமையென்றொருவர்
அள்ளி எடுத்து அணைத்துக்
கொண்டு போய்விட்டனர்

பிடித்தது
பிடித்த நிறத்தில்
இருக்க நினைப்பது கொஞ்சம் ப்ரியம்
நிறையப் பித்து.

நிற்க

நிறத்தில் என்ன இருக்கிறது.? என்று அன்றொரு நாள்
நீ கேட்டாய் அதிதீரா
என்னிடம் அப்போது பதிலில்லை
இப்போது சொல்கிறேன்

நீ கொஞ்சம் அடர் கருப்பு
நான் கொஞ்சம் வெளுத்த சிவப்பு
பிடித்துப் போய்விட்டது
மற்றபடி ஒன்றுமில்லை.

■ வி.வி.கலைச்செல்வி

முடிந்து விட்டதாகச் சொல்கிறார்கள்.
முடிந்து விட்டது
மீண்டும் மீண்டும் தொடர்கிறது...
சற்று நின்றதை
சவக்குழியில் கட்டித் தூக்கிச் செல்கிறார்கள்.
நடுக்கடலில் நின்று
அலையின் சப்தம் கேட்க முயன்றவர்கள்
வானத்தைப் பார்க்க
குமுறும் மேகங்களின் சப்தம்
அலைகளையெழுப்பி ஆர்ப்பரித்தது
முடிந்தது என்பது
முடிவில்லாத ஒன்றின் தொடர் முழக்கம்...
ஆர்ப்பரித்து அடங்குகிறது
அலைகளில்லாத நடுக்கடலின் பேரிரைச்சல்...
மீன்கள்
இரையைத் தேடி வெளி வருகின்றன.

■ முகமது பாட்சா



## கடவுளை வரைவது

ஒரு தேவதையை வரைந்து கொண்டிருக்கும்
தூரிகையிலிருந்து மெல்ல
சாத்தானின் முகம் உயிர் பெற்று எழுகிறது

கனன்று கொண்டிருக்கும் அதன் கண்களுக்குள்
பசி ஆற்றாமையால் ஊளையிடும் ஒரு தெரு நாய்
தோற்றம் கொள்கிறது

மரகதக்கோலிகளென உருளும்
அதன் கண்களுக்குள்
கிழிந்த உடைகளுடன் கையேந்தும்
பதின்ம வயது சிறுமி தோன்றுகிறாள்

பதின்ம வயதுசிறுமியின் கண்களுக்குள்
அவளது உடலை மொய்த்துப் போகும்
ஆயிரம் விழிகள் உருளுகின்றன

ஆயிரம் விழிகளுக்குள்ளும்
தோற்றம் கொண்டு
தோற்றம் கொண்டு மறைந்து போகும்
கடவுளைப் பார்த்தபடி
சிறுமி இமைக்க மறந்து போய்
சிலையாக இருக்கிறாள்

■ தங்கேஸ்

## சொற்களைக் கட்ட கயிறு தேடுகிறேன்

இந்த சொற்கள் தாமே
கோபம் வருகையில் வெட்டிப் பேசுகின்றன
இந்த சொற்கள் தாமே காதலை வசப்படுத்துகிறன
இந்த சொற்கள் தாமே வெறுப்பை உமிழ்கிறன
இந்த சொற்கள் தாமே
குழந்தைகளை அதட்டுகின்றன
இந்த சொற்கள் தாமே
பிரியத்தைக் கிழிக்கிறன
இந்த சொற்கள் தாமே நம்பிக்கை தகர்த்து
கூராயுதமாக உள்ளம் நோக வைக்கிறன

இத்தனையும் செய்து விட்டு
பரந்தாமனின் பாற்கடல் துயிலாக
ஒன்றும் தெரியாதது போலொடுங்கி
இதழ்களுக்குள்
நா

■ பூங்கோதை கனகராஜன்



எதையாவது அனுப்பிவைக்கிறேன்
அப்பொழுதாவது என் ஞாபகம்
உன்னைச் சேருமென்று

அவை யாவும் வேண்டாதவையென
என் குறுஞ்செய்திகளை
இயல்பாய் கடத்தி விடுகிறாய்

என்னை மறப்பது வேண்டுமானால்
உனக்கு எளிதாக இருக்கலாம்
நானும் அதற்காகவே முயற்சிக்கிறேன்

ஆயினும், நான் செய்யும்
ஒவ்வொரு செயல்களிலும் ஏதோ ஒரு ஓரத்தில்
உன் நினைவுகளை எனக்கு
நினைவுப்படுத்திக் கொண்டே இருக்கிறது

மேலும் அனுதினமும் நான்
சந்திக்கும் பல முகங்களின்
நகல்கள் அனைத்தும் உன்னைப்
போலவே தோன்றுவதுதான் ஆச்சர்யம்...!

■ நந்தினி மோகனமுருகன்

நீ இறுதிச் சடங்கு செய்து போயிருந்த
நம் உரையாடல்களை
மீண்டுமொரு முறைக் கேக்கத்தான்
கல்லறை நோக்கி ஓடினேன்...
எத்தனையோ ஆழம் தோண்டியும்
கிடைக்காமல் தேம்பிய
எனது அழுகை முழுக்க அப்பியிருந்தது
மௌனச் சாம்பல்...
இப்போதும் பார் நீ எரித்துவிட்டது
அறியாமல் புதைத்தாய் என
தேடியிருந்திருக்கிறேன்...!!

■ கவிதைச் சிறுவன்



பொம்மைகளைப் போல்
நம்மைக்
காலத்தின் கரங்கள்
அதன் போக்கில்
நகர்த்திக்கொண்டே
இருக்கின்றன...!
வருத்தம் ஏன்...?
பொம்மை ஒன்றை
நம் விருப்பம்போல்
நகர்த்தும் போது
அது வருந்துமா என்ன...?

■ சேனைத்தமிழன்

உடைந்த சில்லுகளால் ஓர் கோட்டை
உதிர்த்த வார்த்தைகள்
முற்செடியென முளைத்துக்கிடக்கின்றன.
நினைவு வருகையிலெல்லாம்
மன மலரில் ரணம் பூக்கின்றன.
வெறுப்பின் உச்சத்தில்
நீ உமிழ்ந்த சொற்கள்
கனன்றெரியும் கங்காய்
எப்போதும் தகித்தபடி.
சமநிலையைக் கலைப்பதில்
கைதேர்ந்தவன் நீ.
மனநிலை சிதறி
அடர்ந்த மௌனத்தால்
கடக்க முயல்கையில்
காணச்சகிக்காத சிரிப்போடு
மன்னிப்பு கோருகிறாய்.
ஒவ்வொருமுறையும்
உன்னால் உடைந்த மனச்சில்லுகள்
கொண்டே என் தனிமைக்கோட்டை
கட்டுவிக்கப்பட்டது.
குழந்தையைக் கொன்றுவிட்டு
பொம்மையை கொஞ்சும்
உன் ஆண்திமிர் அறிவதில்லை
ஒன்றாய் இருப்பதால்
ஒன்றி இருப்பதாய் பொருளில்லை.

■ கௌ ஆனந்தபிரபு



நீ வர எத்தனித்த போதே
விழுந்தோய்ந்து விட்டது
கனமழையின் கடைசித் துளி

எங்கோ கேட்கிறது
என் தோப்பிற்கான குயில்களின்
சிறகோசை

இனி தெளியும் ஓடைக்கரையின்
கூழாங்கற்களிலும்
முகம் விரிக்கும் வானம்

அசையும் உன் ஆடைத் தலைப்பு
பசுமித்த கிளைகளில்
தொட்டில் கட்டும்

இதோ கேட்கிறது
ஆடி முடித்த மயில்வனத்தில்
உனது வரவு குறித்த கிளிக்கதைப்பு

நீ வந்து பாதமிடு
ஒரு நதி
நாகரிகம் அடையட்டும்

கோ. பாரதிமோகன்

வழியில் தடுக்கும்
பெரும் விருட்சங்களின்
வேர்களின் மீதேறி கூட
காலம் உருண்டோடி
கொண்டுதான் இருக்கும்
நதியில் புரண்டோடும்
கூழாங் கற்களைப் போல...
கரையில் நின்று கையசைக்கும்
உன் நிழலுக்கா
நின்று விட போகிறது...

■ யாழ் ஆதி

பாழடைந்த வீடுகள்
பல வண்ணங்களில் புதிதாய்
வண்ணத்துப்பூச்சிகள்.

■ தா. பிரபுபாரதி



பதட்டமான நிகழ்வுகளை
என் வாழ்வின்
பின்னூட்டங்களில் பகிராதீர்கள்.
மனம் சோர்வடைந்து,
தோல்வியின்,இழப்பின்,
கடைசிக் காயை
நகர்த்திக்கொண்டிருக்கிறது.

பேரண்டத்தின் பிறழ்வுகள்
என் நாட்களில் தவறும்
ஒரு வேளை உணவுக்கு ஒப்பானவை.

உங்கள் உணர்ச்சியின் திகைப்புகள்
என் நாளாந்த நிகழ்வுகளில் சிதறிய
பொய் நகைப்புக்கு ஒப்பானவை.

என் நிஜத்தில் உங்கள்
நிழல்களைக் காண்பிக்காதீர்கள்.

நான் இப்பொழுது
நிஜத்தை தவிர்த்து
நிழல்களுக்கே அஞ்சி
வாழ வேண்டி இருக்கிறது.

■ ரமீஸ்கான் அப்பாஸ்...

கடலில்
முதல் அலை எது?
கடைசி அலை எது?
அணைத்து நிற்கும் கரை
அறிவதில்லை.
எத்தனையாவது அலை தீண்டினாலும்
ஒரேமாதிரி முத்தமிட்டு அனுப்புகிறது.
என் அடுத்தடுத்த தவிப்புகளை
நீ அப்படித்தான்
விரல்விட்டு எண்ணத்தெரியாத
குழந்தைபோல் கையாள்கிறாய்.
இனி ஒவ்வொரு அலைக்கும்
கரை ஒதுங்கியும் கடல் மூழ்கியும்
அலைக்கழியும் சிப்பியின் பிரயாசையில்
எனக்கான முத்தினை செய்
தேவதா...

■ தி.கலையரசி



## திரும்பி வருவது அழகல்ல

முடிவுகளுக்குள் முடித்து
போவதுதான் அழகே...

உன் அங்கலாய்ப்பு
உன் கூக்குரல் கேட்காமல் இல்லை

மலராவதும் பின்
சருகாவதுமே சம்பிரதாயம்...

நம் நேசம் கூட
மலரானதுதான்

வெள்ளி திரையில் விழும்
பிம்பங்களாய் நாட்கள்

முடிவுகளை நோக்கி
காத்திருப்பது வாழ்வல்ல

முடியும் வரை
வாழந்திருப்பதே வாழ்க்கை

இந்த ஒரு வழி சாலையில்
எதிரெதிராய் சந்தித்து கொண்ட
சரிதம் தவிர – சொல்லிக் கொள்ள
என்ன இருந்துவிட போகிறது

நீ வாழ்கிறாய் என நானும்
நான் வாழ்கிறேன் என நீயும்
மரணிக்கும் வரை
அசைபோடும் ஆனந்தத்தை தவிர...

■ கே.பாலன் வடக்கத்தியான் பட்டி

## என்னை உயிர்ப்பிக்கும் காட்சிப் பிழை...

அவன் வராத நாட்களில்
தூங்க முடியாமல் மனம் கனத்து விழி
பிதுங்கி பிதற்றி நிற்கிறது பெண்மை...

செடிகள் தங்கள் சுயம் இழந்து
வாடி வதங்கி பூக்களைப்
பிரச்சவிக்காமல் இருப்பதுபோல்
ஒரு வெறுமை...

பறவையில்லாத வானம்...
மீன்கள் இல்லாத நதிகள்...
ஒளியிழந்த நிலவு...
இவை என்னில் படர்வது உண்மை...

நீ மீண்டும் வருவதாய்
ஒரு தோற்றம் என்னை உயிர்பிக்கும்...
காட்சிப் பிழையாய் இருந்தால் கூட
எனக்குச் சம்மதமே...

■ ஜெகன் மோகன்



நேற்று
மழை பெய்த கிளையில்
இன்று பனி பெய்கிறது.
நேற்று
கிளி அமர்ந்த கிளையில்
இன்று குயில்.
இரண்டும் அழகுதான்.
மழைக்கிளி
பனிக்குயில் என்று
சொல்லிப் பார்த்துக்
கொண்டேன்!

■ நேசமிகு ராஜகுமாரன்

யாரேனும்
நேசிக்கவில்லையோ...,

நேசிக்கப்படுவதை அறியவில்லையோ...,

விட்டுவிடுங்கள்...

அவர்கள்
விழிகள் மூடியே
வாழ்ந்திருக்கட்டும்!!

■ Dr ஜலீலா முஸம்மில்



சருகை
நழுவ விடுவதையறியாத
மரம் போல்...

காற்றிலுதிரும்
இதழையறியாத
பூவின் காம்பைப்போல்...

வானோடு கதைத்துக் கொண்டிருக்கும் போதே
உதிரும்
இறகையறியா
பறவையைப்போல்...

துடிப்பை நிறுத்துவதறியா
மெய் கூட
மெய்யாலும் அழகான வரம்தான்...

■ ஸ்ரீவாரி

தொடர் வண்டிப்
பயணத்தித்தில்
யாசகம் கேட்கும்
சிறுமிகள் மாறிக்கொண்டிருக்கிறார்கள்
மாறாதது
அந்தப் பாடலுடன் சேர்த்து
வறுமையும் தான்.

■ பென்ஸ் பிரான்சிஸ்



## புரிதல் பிரளயம்!

இப்போது புரிகிறது...
இப்போது வலிக்கிறது...
இப்போது தெரிகிறது...
இப்போது இருள்கிறது...
இப்போது கனக்கிறது...
இப்போது உடைகிறது...
இப்போது முடிவுறுகிறது...

உன்னில் நான்
இல்லை இல்லவே இல்லை
என்கிற
ஒற்றை யதார்த்தம்.

இத்தனை கவிதைகளுக்குப்
பிறகாவது
உன் மௌனம் உடைத்தெனை
மறுதலித்தாயே!
அதுவரையில் ஆறுதல்.

நன்றாக இரு நீ...!
இனியென்ன எனக்கு?
மெல்லச் சாகிறேன் நான்!

■ அன்புடன் ஆர்க்கே!

மலை பாம்பைப் போல்
ஊர்ந்து செல்கிறது மலைப்பாதை
இரவுக்கு ஒத்திகைப் பார்க்கிறது
அந்தி வானம்
விழியால் முத்தமிட்டுச் செல்கிறது
அவள் பார்வை
கலவரம் இல்லாமல் கண்ணை மூடுகிறது
பகல் வெளிச்சம்
இப்போது இருளுக்கும் வெளிச்சத்துக்கும்
இடையில் கிடந்து துடிக்கிறது இதயம்.!

■ த.முருகன்



வேசத்தின்
நிறம்தேடி வெகுதூரம் வந்துவிட்டேன்
இன்னும்
தென்படவில்லை...

மரக்கிளையில் மறைந்திருக்கும்
பச்சோந்தி
அதற்கிடையில்
தன் சந்ததியைப்
பெருக்கிக் கொண்டது...

நம் கைகளுக்குள்
வாகாய் இறுகப் பற்றி
அறுத்தெறியும்
கோடரிக் காம்புகள்
பல மரங்களை அதற்கிடையில்
கொத்தித் தறித்தன...

இன்னும்
கண்களுக்குப் புலப்படவில்லை
காற்றைப்போல்
என்னை மெதுவாய்
வருடிக் கொடுத்தபடி
தள்ளி வீழ்தியதை
உணர்கிறேன்...

மண்ணை
உண்டு தீர்த்து
அதில் வீடுகட்டி
வாழ்ந்து கழிக்கும்
கறையான்களைப்போல்
பல கறையான்கள்
மண்போல் என்னைத்
தின்று தீர்ந்துவிட்டன...

இன்னும் இப்போதும்
தேடிக்கொண்டே இருக்கிறேன்
நீங்கிக்கொண்டே
இருக்கிறேன்
ஆனாலும்
நீக்க முடியாமல் சில
வஞ்சக உறவுகளை!

■ ஜீ.சுமித்ரா



முற்றிப்போன ஒரு
விவாதத்திற்கு பிறகான இரவில்
நான் உன்னையும்... நீ என்னையும்
தனித் தனி அறைகளில்
தேடிக் கொண்டிருந்தோம்
தாழ் திறக்கும் ஓசை யாரிடமிருந்து
முதலில் கேட்கப் போகிறதென
செவிகளை தீட்டி வைத்துக் கொண்டிருந்தோம்
திறவாத கதவுகளின் மேல் நமது அன்பு
முட்டி மோதிக் கொண்டிருந்ததை
வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்
கனத்த மௌனத்திடம் நாம்
பெரும் யுத்தமொன்றை
நிகழ்த்திக் கொண்டிருந்தோம்
நீண்ட நெடிய யுத்தத்தின் பின்
மௌனத்திடம் வெட்டுண்டு
உயிரை கையில் பிடித்துக் கொண்டு
நான் அங்கும் நீ இங்குமாக
வந்து சேர்ந்தோம்...!!!!

■ கி.கவியரசன்

பார்வை இல்லாதவர்
நம்பிக்கையோடு விற்கிறார்
கருப்புக் கண்ணாடி...

■ ஐ.தர்மசிங்

## அனிச்சைச் சொல்...

காலை வணக்கம்
இரவு வணக்கம் போல
நான் “நலம்“! என்பதும்
நாகரீக வாழ்வில்
அகப்பட்ட பின்பு
அனிச்சைச் சொல்லாகிவிட்டது
அனைவருக்கும்...

■ ஜனனி



“கூடப்பிறந்தவ
முச்சந்தில நின்னு
கதறி அழுதுகிட்டு இருக்கா
என்ன ஏதுன்னு கேட்காம
எனக்கென்னன்னு
போறாரு பாரு” என்று
தொடங்கி
“கேட்டா வீட்டுல போயி
அந்த அம்மாகிட்ட
யாரு வாங்கி கட்டிக்கிறது” என்று
முடிந்த
அவன் போகிற போக்கில்
ஒரு செவியை
மிக நெருக்கமாக உரசிச் சென்ற
மிகச் சுருக்கமான
புறணியில் இருந்த
கலப்படமில்லாத வாய்மை
சுக்கு நூறாக
ஒருமுறை நொறுக்கியது
அதற்கு முன்புவரை
புறணி பற்றி
அவன் கொண்டிருந்த
எதிர்மறையான
நம்பிக்கைகளை மட்டுமில்லை

■ அருப்புக்கோட்டை ஆதன் ஆரா

இரை கண்டு தாளப் பறக்கும்
பறவையென
அன்பில் நழுவுகையில்
ரகசியமாய் கசிகிறது
ஏங்கித் தாகித்திருந்த ஓர்
வரள் மனம்.
பொழிகிற மழை தனக்கானதா
எனும் தயக்கத்துடனே
நனைகிறது
பின்
தொடர்ந்து
ஏங்கிக் காயத் துவங்குகிறது.
அது வாங்கி வந்த வரமும்
சாபமும் ஏங்கிக்
கிடப்பதொன்றுதான்.

■ வருணன்



## ஏதாவது செய்

இந்த தூரம் என்னை கொல்கிறது
இந்த ஏக்கம் என்னை தின்கிறது

ஏதாவது செய்

அவ்வப்போது
இரவுகள் விழித்துக் கொள்கிறது
பகல்கள் கண்ணயர்கிறது

ஏதாவது செய்

வருடங்களாய் செய்துவந்தவை மறக்கிறது
சீராய் சுவாசம் மட்டுமே உள்ளது

ஏதாவது செய்

இன்னுமாய்
தோட்டமும் பூக்களும் கூட
துறக்கிறேன் பட்டாம்பூச்சிகள்
என்னை பரிகசிக்கிறது

ஏதாவது செய்

நீயும் நானும் தொலைத்தது போதும்
நாம் வாழ கொஞ்ச காலம் வேண்டும்

ஏதாவது செய்
சீக்கிரம் செய்.

■ தீபிகா சுரேஷ்

முதல் முறை
சர்க்கரை கூடுதலாகிவிட்டது
இரண்டாம் முறை
சாயம் அதிகம் இறங்கிவிட்டது
பின் தண்ணீரின் அளவு
மிஞ்சியிருந்தது
ஒருமுறை பால் சுண்ட காய்ச்சி
தேநீர் தடித்திருந்தது
சிலமுறை இனிப்பு
குறைந்திருந்தது
ஓரிரு நாட்கள் குறைந்த
சாயம் கலந்து தேநீர் பால்
நிறத்திலேயே இருந்தது
ஆனால் எந்த முறையும்
அவள் தயாரித்த
தேநீர் பிடிக்கவில்லையென்று
சொன்னதே இல்லை
பெண் பார்க்க வந்தவர்கள்...

■ நிழலி



## மௌனங்களுக்கு பழகிய வீடு

மனிதர்கள் நடமாடினாலும்
எதன் காரணத்திற்காகவோ
மௌனத்திற்கு பழகிய வீடு
கொஞ்சம் கொஞ்சமாக
தன் வண்ணங்களை இழக்கிறது...

தொலைக்காட்சி குரல்கள்
அலைபேசி ரிங்டோன்
கடிகார முட்களின் ஒலி
அழைப்பு மணியோசை
உள்ளிட்டவைகளால்
அவ்வப்போது மௌனங்கள் கலைந்தாலும்
நிஜக் குரல்களுக்கு
ஏங்கிப்போகிறது...

உரக்க சத்தமிட்டு
எழும் வாக்குவாதங்களை விட
கொல்லும் மௌனம்
மிகக் கொடிது என
சொல்ல முயற்சிக்கின்றன
பெயர்ந்து விழும்
வீட்டுச்சுவர்கள்...

அன்பை, உறவுகளை
காதலை என
எதை வேண்டுமானாலும்
பழக்கி கொள்ளலாம்
மௌனங்களை அல்ல
எழுதி முடிக்கையில்
கிழக்கிலிருந்து கேட்கிறது
கவுளி சத்தம்...

■ பிரபுசங்கர் க



ஓர் அடைமழை
அப்படி என்ன
செய்து விடும்

மீண்டுமொரு
வெப்ப காலத்துக்காய்
ஏங்குவதைத் தவிர!

■ ஷப்ரா இல்முத்தீன்

வீசிய தானியங்கள்
காக்கை, குருவி உண்ண
பசியாறினான் பாரதி

■ கோவை புதியவன்

சுவையானதொரு காபி,
சுகமானதொரு காதல்,
பரவசமான பயணம்,
பரிதவிப்பு நிறைந்த பிரிவு...
இப்படியான
ஒரு நல்ல...
ஒரு சிறந்த எனும்.
நிகழ்வுகளெல்லாம்
எல்லோருக்கும்
ஒரேயொரு முறைதான்
வாய்க்கிறது வாழ்வில்...

அடுத்தடுத்து...
நடப்பதும்...
கிடைப்பதும்...
முதல் முறையின் சாயல்கள்
அவ்வளவு தான்...

■ வினோத் பரமானந்தன்



## நானாகிப் பாரேன்

நீ...
நானாகிப் பாரேன்...

சின்ன மகிழ்ச்சி யை
பூதாகரமாக்கிப் பூரிப்பாய்...
உன் அறிவு மொத்தமும்
அன்பானவர்களிடம்
அடைக்கலம் ஆகும்...
ஓடிப் பிடித்து விளையாட
கூடிச் சேர்ந்து கும்மாளமிட
ஆட்கள் தேடி
அங்குமிங்கும் அலைவாய்...
மணல் குவித்து வீடு கட்டுவாய்...
தொட்டி மீனை ஆற்றில் விடுவாய்...
லவ்பேர்ட்ஸ் கூட்டைத் திறந்து பறக்க விடுவாய்...
வானம், பூமி நிலா தேவதை சிறகு என
பிதற்ற ஆரம்பிப்பாய்...
எல்லாவற்றையும் விட
மனதில் இருப்பதைச்
சொல்லத் தொடங்குவாய்...
நானாகித்தான் பாரேன்...
நீ...
நீயாக இல்லாமல்.

■ பரமேஸ்வரி சண்முகம்

## ஆங்காங்கே சில சொற்கள்

விரவிக் கிடக்கும் சொற்களில்
எதைநான் எடுப்பது
எதைத்தான் விடுவது
எப்படித் தேர்வு செய்தாலும்
வார்த்தைப் பஞ்சம்
அல்லது பொருந்தா வார்த்தைகள்
என ஒவ்வொரு முறையும்
ஏமாந்து போகிறேன்
இப்போதும் கடந்து போன நாட்களுக்கான
பல சொற்கள் என்னிடம்
செல்லரித்து சேகரமாகித்தான் கிடக்கிறது.

■ எஸ்.உதயபாலா



வயிறு
நிரம்பியதறிந்தும்
அறியாதது போல
கூடுதலாய் பாலூட்டியவள்

தூங்கிவிட்டதறிந்தும்
உணராதது போல
கூடுதலாய்
தாலாட்டியவள்

போதுமென்று சொல்லியும்
கேளாதது போல்
இன்னொரு தோசை
வார்த்தவள்

இன்று
எதிர்முனையில்
இணைப்பு துண்டிக்கப்பட்டது அறிந்தும்
மேலும் கொஞ்சம் நேரம்
காதிலேயே
அலைபேசியை வைத்திருக்கிறாள்!

அன்னை என்றாலே
கொஞ்சம்
அதிகம் தானே!

■ அ.சீனிவாசன்

தனிக்குடித்தனம் சென்ற
மொட்டை மாடி ஓரத்தில்
கூடு கட்டியது தேனீக்கள்.

தவறவிட்ட பேருந்தின் பின்பக்கத்தில்
எழுதி இருந்தது
காலம் கண் போன்றது.

■ அ. உமர் பாருக்



விரல்களைத் தான் பிடித்தேன்
வெட்கத்தை
உதற முடியாமல் தவிக்கிறாள்.

விரல்களைத் தான் பிடித்தேன்
என்னை இழுத்துக்கொண்டு
போனது அவள் விழி.

விரல்களைத் தான் பிடித்தேன்
அவளை
விடுவித்துக்கொண்டது தயக்கம்.

விரல்களைத் தான் பிடித்தேன்
என் விரலோடு
ஒட்டிக்கொண்டது அவள் ஏக்கம்.

விரல்களைத் தான் பிடித்தேன்
விடாமல்
எழுத வைக்கிறது எங்கள் காதல்.

விரல்களைத் தான் பிடித்தேன்
விட்டு விட்டு பிடிக்கிறது
எங்கள் கட்டில்.

விரல்களைத் தான் பிடித்தேன்
விரட்டிக் கொண்டே
வருகிறது எங்கள் குழந்தை.

விரல்களைத் தான் பிடித்தேன்
இங்கேயுமா
என்கிறான் வெட்டியான்.

■ நயினார்

தேவதைகளென
அடையாளப்படுத்திக்
கொள்ள
சிறகுகள் தேவையில்லை...
ஒரு புன்னகை போதும்!

■ மு.முபாரக்



உங்களருகே நிற்கையில்
எனக்கும் சேர்த்தே வட்டமிடுகிறீர்கள்
உங்கள் வட்டத்துக்குள்
நானுமிருப்பதாகக் கருதுகிறீர்கள்
அங்கிருந்து நகரும்போது
அதிர்ச்சியாகிறீர்கள்...
வேறிடம் சென்றதும்
இன்னொருவர் வட்டம் வரைகிறார்
அவரின் வட்டத்தினுள்
நானிருப்பதாகக் கூறிக்கொள்கிறார்
இப்படித்தான்
நான் நகருமிடமெல்லாம்
யார் யாரோ இருக்கிறீர்கள்
என்னையும் சேர்த்தே வட்டமிடுகிறீர்கள்
விலகும்போதெல்லாம்
அதிர்ச்சியாகிறீர்கள்...
எங்கெங்கும்
நீங்கள் நிறைந்திருக்கையில்
கிட்ட இருப்பதும் தூர இருப்பதும்
என் தவறல்ல...
உங்கள் வட்டங்களுக்குள்
என்னை வளைப்பதும் என் தவறல்ல...
எதுதான் எனக்கான வட்டமென
இறுதியாய் கேட்கிறீர்கள்
உறுதியாகச் சொல்கிறேன்
உங்கள் வட்டத்துக்குள்
நான் எப்போதுமில்லை...

■ வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்

பசி ஏப்பமும்
புளி ஏப்பமும்
ஒரே நேர்க்கோட்டில்
சந்தித்துக் கொள்கிறது

எச்சில் இலை
குப்பைத் தொட்டியில்.

■ சுரேஷ்பாபு ராசேந்திரன்



அம்மா இல்லாத வீடு
வெறும் செங்கல்
குவியல்.

அம்மா இல்லாத வீட்டில்
வீடும் இருப்பதில்லை...

அம்மா இல்லாத வீட்டில்
திருட்டுத்தனமாய் நுழையும்
பூனைகளும் வர மறுக்கிறது...

அம்மா இல்லாத வீட்டில்
வாசலில் இருக்கும் மரத்தில்
பழுப்பு இலைகளோடு
பச்சை இலைகளும் சேர்ந்து உதிர்கிறது...

அம்மா இல்லாத வீட்டில்
கூரை மேல் இருந்த காகம்
மௌன விரதத்தில் இருக்கிறது...

வீட்டில் ஓடித்திரியும் எலிகளும்
அம்மா இல்லாமல் பதுங்கி இருக்கிறது
பூனைகளின் பக்கத்தில்...

■ கோ. சிவா தமிழ்.

வெற்றிடத்தில் உலவும்
காற்றின் ஈரப்பதத்தில்
நம் பிரிவின் துயர்...

■ த. ரவீந்திரன்



நறுமணம் விலக்கப்பட்ட
மலர்களுக்கும் சேர்த்தேதான்
இரங்குகிறது மேகத்தின் கருணை
இசைக்கிறது இந்த மழைத்துளிகள்
மழை, வேர் காணாது
நெகிழிகள் மண்டிக் கிடக்கும்
நிலத்தில் கூட
சிறு துளைகளில் நுழைந்து
பூத்துவிடுகின்றன பூக்கள்...

குடைவிரிக்கும் காளான்களுக்கு
அடியில் குளிர் காய்கின்றன
சிற்றெறும்புகள்...

தத்தளிக்கும் முடிவற்ற வாழ்வாய்
எப்போதும் துளிர்க்கிறது
இன்னுமொரு அன்பு...

ஏதேனோடும் எதுவும்
முடிந்து போவதில்லை
நிறத்தலும் உதிர்தலும் பின்
துளிர்த்தலும் இயல்பே...

ஒரு பெருவலியின் பின்
ஆழ்மனச் சமுத்திரத்தில்
பெங்கிப் பெருகும் அலையை
விழி வழி சிந்தாமல்
உள்ளூரும் துக்கத்தை
ஏற்றுக்கொள்ளல் என்பது
மாபெரும் தவம்...
வாழ்தற்கேயான வரம்...

■ சங்கரி சிவகணேசன்

குளிரை
இழுத்துப் போர்த்திக் கொண்டு கிடந்தேன்
சாளரம் வழியே
சன்னமாய் நுழைந்த
வெயிலோன்
சத்தம் இல்லாமல்
ஒரு வெப்ப முத்தம் வைத்தான்.

சோம்பலை சுருட்டி மடித்தேன்
காலம் காத்திருந்தது
கால்களில் சக்கரம் பொருத்த.

■ காசாவயல் கண்ணன்

என் அன்பின்
பலவீனங்களை
கையாலாகாத்தனமென
நினைத்துக்கொள்ளாதீர்கள்

உங்கள் மீதான
அதீத
அன்பினால்தான்
கண்ணீர் சிந்தினேன்
அன்பினால்தான்
பின்தொடர்ந்து வந்தேன்
அன்பினால்தான்
தோற்றுப்போய் திரும்பினேன்
அன்பினால்தான்
மூடியக் கதவுகளைத் தட்டினேன்
அன்பினால்தான்
அவமானங்கள் சகித்தேன்
அன்பினால்தான்
பழிகள் சுமந்து நின்றேன்
அன்பினால்தான்
மீண்டும் மீண்டும் மன்னித்தேன்
அன்பினால்தான்
அத்தனைக்குப்பின்பும் நம்பினேன்

அதற்காக
என் அன்பின்
பலவீனங்களை
கையாலாகாத்தனமென
நினைத்துக்கொள்ளாதீர்கள்

தவிர
ஒரு முட்டாளின்
வெறும் கையாலாகாத்தனங்களென
நீங்கள் எண்ணிக்கொள்ளும்
யாவும்
அன்பின் பெயரில்
என் பலங்களென
நான் கர்வம் கொண்டிருந்திருந்தவையேதாம்

பின்னும்

அடங்கிப்போவதும்
மண்டியிட்டு நிற்பதும்
ஓர் அன்பின் முன்
மட்டுமே



தவிர
என் அன்பினைப்
பயன்படுத்திக்கொள்ள
முனையும்
நயவஞ்சகர்களிடம்
அல்ல

ஆக
தயவுகூர்ந்து
யாரும்
என் அன்பின்
பலவீனங்களை
கையாலாகாத்தனமென
நினைத்துக்கொள்ளாதீர்கள்

■ ரிஸ்கா முக்தார்



காய்கள் என்னவோ
அழகாக நகர்த்தப்படுகின்றன
வேட்டையின் எச்சில்கள்
ஒழுக ஒழுக பசி தீராத கண்கள்

இருபுற சம்மதம் என்பதெல்லாம்
இலக்கை நோக்கிய படிக்கட்டில்
சமதளமாய் பங்கு பிரிக்கப்படுகிறது

கோப்பைக்குள் குடியிருக்கும்
சதைகளை அது கிழிந்து
தொங்குவதைப் பற்றிய கவலையற்று
அடுத்தபடியை
நோக்கி நகர்கிறது கால்கள்

எப்படியும் வெளிச்சத்துக்கு
வந்து விடும் உண்மைகளுக்கு
தோல் சுற்றிக்கிடக்கிறது
பொய்மை அவை முடிவிலி

வாசலில் நிற்கும்
வழிப்போக்கன் ஒருவன் போல்
சில்லரையை சிதறவிடுகிறாய் நீ

உன் பின்னால் ஒட்டியிருக்கும்
சுவரொட்டியை ஊர்ஜிதம்
செய்து பார்வையற்றவள் போல்
கடக்கச் செய்கிறாய்

அவளை எத்தனை முறை
உடைத்திருப்பாய்
வாழ்வதற்கான படிக்கட்டு
ஒன்றை வடிவமைத்து
தானே மீண்டு வருகிறாள் பார்.

■ உமா மஹேஸ்வரி பால்ராஜ்

கிழித்து தீர்ந்தப்பின்னும்
கிழக்கு பார்த்தபடி
தொங்கிக்கொண்டிருக்கிறது
நாட்காட்டியின் அட்டை

பூ வாங்கும்போதெல்லாம்
அதற்கும் சேர்த்து..........
அரைமுழம் கேட்கிறாள் அம்மா

எங்கோ ஒரு அங்காடிக்காரன்
எதேச்சையாய் நீட்டியதென்றாலும்
நிற்கதியற்றவர்களின் வீட்டில்
நிரந்தரமாகிப்போகிறது
கடவுளின் படம்தாங்கிய
அந்த காலண்டர் அட்டை.

■ கா வெங்கடேஸ்வரன்



என் முன்னே நீட்டப்படும்
யாசிப்பு கரங்களை
நிமிர்ந்து பாராமலே
நிராகரிக்க கற்றுக் கொண்டேன்!

சாலையோர மரங்களில்
உதிர்ந்து கிடக்கும்
பூக்களின் மேல்
மிதித்து நடக்கவும் கற்றுக்கொண்டேன்!

என்னைக் கண்டதும்
ஓடிவரும்
எதிர் வீட்டு மழலை,
வாலாட்டிக் கொண்டு வரும் சாலையோர நாய்க்குட்டி,
புன்னகைத்து
வணக்கம் சொல்லும் நடைப்பாதை கடைக்காரர்
இவர்களையெல்லாம்
பார்த்தும் பார்க்காதது போல்
பாராமுகமாக கடந்துச் செல்லவும்
பழகிக் கொண்டேன்!

கைப்பிடித்து நலம் விசாரிக்கும்
உறவுகளிடமும் நேரமில்லையென
அவசர சமிக்ஞை காட்டி
கைப்பிடி விலக்கி நகரவும்
கற்றுக் கொண்டேன்!

முன்னே விழுந்தவனை தூக்கி விட நேரமின்றி
தாண்டிச் செல்லவும் பழகிக் கொண்டேன்!

அதிவிரைவாக சூழலும் காலச்சக்கரத்தின்
பரிணாமத்திற்கேற்ப
என்னை நானே
முழு மனிதனாக பரிணாமித்து கொண்டேன் !
என்ற மமதையில் கண்ணாடி முன் நின்று
என்னைப் பார்க்கிறேன்?

என் தலைக்கு பின்னே
எப்போதும் தெரியும் மயிலிறகு
மகுடம் சூடிய வெண்ணிற இறகுகள்
அசைந்தாடும் அதிரூபத்தின் அரூபம்
மெல்ல மெல்ல மறைந்து ?

இருபக்க கொம்பு முளைத்த
கடைவாய் பல் நீண்ட சாத்தானின் கோர ரூபம்
என் நிஜத்தின் பின்னே நிழலலுருவாய் தெரிகிறது?

■ மகா செல்வம்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

## சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்!

“ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும்” என்ற உயரிய எண்ணத்தோடு புத்தகங்களைத் திரட்டிக்கொண்டிருக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு இலக்கியப் படைப்புக் குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களைச் சேகரித்துக்கொண்டிருக்கிறது.



**புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**


**இலக்கிய படைப்பு குழுமம்**
#3, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம், சென்னை – 600 024
Ph: +91 7338847788